Regd. No. M. 4593. 8-பக்கங்கள். தனிப்பிரதி விலை 0-1-0.

குடி அரசு

ESTD. 1924

வருட சந்தா உள்நாடு ரூ. 4-0-0. வெளிநாடு ரூ. 6-0-0.

மாலை 21 ஈரோடு 20-9-1947 சனிக்கிழமை மலர் 2.

ஒரு ஆராய்ச்சி

(சித்திரபுத்திரன்)

இராட்சதர்கள் தபசு செய்தார்கள், வரம் பெற்றார்கள் அந்த வரத்தைக்கொண்டு அக்கிரமம் செய்தார்கள் என்பதெல்லாம் இந்நாட்டுப் பழங்குடி மக்களையும் அவர்கள் தலைவர்களையும் இராட்சதர்கள் என்று சொல்லிக் கொல்லுவதற்குக் கடவுள்களும், தேவர்களும் என்ற பெயர் கொண்ட ஆரியர்கள் வழி தேடிக்கொண்ட ஒரு சாக்கே அல்லாமல், அவர்களது வரம் எதுவும் பயன்பட்டதாகத் தெரியவில்லை.

விஷ்ணு, சிவன் ஆகியவர்கள் யார்? எப்போது உண்டானார்கள்? எப்படி உண்டானார்கள்? எங்கிருந்து வந்தார்கள்? ஏன் வந்தார்கள்? என்பதற்கு ஒரு ஆதாரமும் கிடையாது.

அதுபோலவே தேவர்கள் யார்? எப்படி உண்டானார்கள்? எங்கிருந்து வந்தார்கள்? ஏன் வந்தார்கள்? உலகிற்கு அவர்களால் என்ன பயன்? என்பதற்கும் ஆதாரம் கிடையாது.

இவர்கள் எல்லாம் இமயமலைக்கு இப்புறம்தான் அதாவது இந்தியா கண்டம் என்னும் பிரதேசத்தில் இருந்தார்களே ஒழிய மற்ற இந்தியாவுக்கு அப்பாற்பட்ட ஐந்து கண்டங்களிலும் இருந்ததாகவோ அந்தக் கண்டங்களைப் பற்றி இவர்கள் ஏதாவது தெரிந்திருந்ததாகவோ சரியான தகவல்களைக் காணோம்.

கீழ் ஏழு லோகம், மேல் ஏழு லோகம் கண்டுபிடித்தவர்கள் ஆப்பிரிக்கா, அமெரிக்கா, ஆசியா, ஐரோப்பாக்களைப்பற்றி ஒன்றையும் கண்டுபிடித்ததாகவோ அல்லது அங்குள்ளவர்கள் இந்தியாவையும் சிவ, விஷ்ணு, தேவர், அசுரர், ராட்சதர், சூரன் ஆகியவர்களை அறிந்திருந்ததாகவோ தகவல்களையும் காண முடியவில்லை.

அவதாரங்களில்கூட அக்கடவுள்களின் ஆட்சியில் அவர்களது பிள்ளை, குட்டி, மனைவி முதலியவர்கள் வாழ்க்கையில் உள்ள இடம், மலை, ஆறு, கடல், ஊர், வீடு, வாசல் எல்லாம் இந்தியாவில் இருப்பவைகளைத்தான் சொல்லப்படுகின்றனவே ஒழிய மற்றநாட்டு மலை, காடு, வனம், நதி, சமுத்திரம் எதுவும் சொல்லப்படவில்லை. கடவுள்கள், தேவர்கள் வாழ்க்கைகளில் காணப்படும் "பூலோகமே" இந்தியாவாகத்தான் கருதப்பட்டிருக்கின்றதே தவிர வேறு ஒன்றும் சேர்க்கப்படவில்லை.

இவற்றையெல்லாம் யோசித்துப்பார்த்து, இந்தியக் கண்டத்தின் பூர்வநிலை, அதாவது ஆரியர் வருவதற்குமுன் இருந்த நிலையையும் யோசித்துப் பார்த்தால் சிவன், விஷ்ணு அல்லது சேயோன், மாயோன் மற்றும் திருக்குறள், தொல்காப்பியம் ஆகியவற்றில்வரும் உலகம் முதலியவை பெரும்பாலும் இந்தியாவுக்குள் ஆரியர் வந்தபிறகு ஏற்பட்டவைகள்தான் என்பதும் அவை இந்தியாவைப் பொருத்தவைகள்தான் என்பதும் சாதாரணமாய் விளங்கும். அவைகளைப்பற்றித்தான் மற்ற வேறு ஆதாரங்களும் விளக்குகின்றன.

சிந்து நதிதீரத்தைப்பற்றியும் அங்கு மகஞ்சதாரோ, ஹரப்பா முதலிய கண்டுபிடிக்கப்பட்ட பூர்வ சின்னங்களைப்பற்றியும் பேசுவதில் ஆரியர்களுக்கு முன் தமிழர்கள் அங்கிருந்தார்கள் என்றும் இந்தியா கண்டம் பூராவும் தமிழர்கள் இருந்தார்கள் என்றும்தான் சொல்லப்படுகிறது.

ஆனால் மகஞ்சதாரோ, ஹரப்பா நாகரிகம் இன்றைக்கு 6000, 7000 வருஷ காலத்துக்கு முந்தியது என்று சொல்லப்படுகிறது.

ஆரியர்களுக்குமுன்பே இந்த இடங்கள் நாகரிகமாய் இருந்திருந்தால் ஆரியர் இங்கு எப்படி வந்திருக்கமுடியும்? இந்தியா கண்டம் முழுவதும், சமயம், சமுதாயம், கலை, பழக்கவழக்கம் முதலிய யாவும் ஆரியமயமாய்— ஆரிய ஆகமம், ஆரிய ஆச்சாரம் தர்மம், ஆரியக்கதை ஆகியவைகளைக்கொண்ட இலக்கண இலக்கியம் சரித்திரம் காவியம் ஆகியவை எப்படி ஏற்பட்டிருக்க முடியும்?

கோவில்கள் எல்லாம் தமிழர்களுடையதா ஆரியர்களுடையதா என்று பார்த்தாலும் அவற்றிற்குப் பணம் செலவு செய்தவனும், கட்டடம் கட்டினவனும், அதற்கு மான்யம், மடப்பள்ளி விட்டவனும் தமிழனாக இருக்கலாம்; சந்தேகமேயில்லை. ஆனால் சொந்தக்காரனும் கோவில் ஆகமக்காரனும் கடவுள் தன்

மைக்காரனும் ஆரியனாகத்தானே இருக்கிறான்?

கோவில்களில் உள்ள உருவங்கள் அதன் தோற்றத்திற்கு ஆன கதைகள் பூசை உற்சவமுறைகள் நைவேத்திய சாதனங்கள் ஆகியவை ஆரியர்களுடையதாகத் தானே இருந்துவருகின்றன? அந்தக் கோவில்கள் கட்டப்பட்ட காலத்திலும் அப்போதுள்ள அரசர்கள் ஆட்சியிலும் ஆரிய ஆதிக்கம் தலைசிறந்து உச்சஸ்தானத்தில் இருந்தது என்பதற்கு "முதல், இடை, கடைச்" சங்கங்களும், அப்போதிருந்த புலவர்களும், அரசர்களும், அரசநீதியும் அவர்கள் கைக்கொண்டிருந்த சமயங்களும் உதாரணமாக இல்லையா?

இந்த நிலையில் அசுரர், இராட்சதர்கள் என்பவர்கள் யாராக இருந்திருக்கமுடியும்? அவர்கள் எங்கிருந்து வந்திருக்கமுடியும்? அதுவும் இந்தியாவிற்குள் உள்ள அயோத்தி, மதுரை, டெல்லி, மிதிலை, காந்தாரம், விராடம், விதர்ப்பம், தண்டகாரண்யம், கோதாவரி, சித்திரகூடம் ஆகிய இடங்களும் அங்கும் அதற்குப் பக்கத்திலுமே தாடகை, கரன், சூர்ப்பநகை, மாரீசன் முதலியவர்களும் இருந்தார்கள் என்றால் இவர்கள் யாராக இருந்திருக்க முடியும்? இதைக் கண்டு பிடிக்கப் பெரிய பெரிய புராண, சரித்திர, இலக்கிய, காவிய நூல் ஆராய்ச்சி ஏன் வேண்டும்?

இவை பொய்க் கதை கற்பனை கதைகளாக இருந்தால் கவலை வேண்டாம். மெய்க்கதை சிறிதாவது நடந்த கதை என்றால் கோதாவரி நதிக்குப் பக்கத்திய தேசத்தில் தான் இராவணன் தங்கை சூர்ப்பனகை இராவணன் தம்பி கரன் முதலியவர்கள் இருந்திருக்கிறார்கள். அவர்களைப் பார்த்து "உங்களைக் கொல்லவே நான் வந்தேன்" என்று இராமன் சொல்லுகிறான். முனிவர்களும் "பக்கத்தில் ஜனஸ்தானம் இருக்கிறது. அங்கு இராக்ஷதர்கள் இருக்கிறார்கள்" என்கிறார்கள்.

இந்தியா கண்டத்தின் பாகத்தைக் கடல் கொண்ட காலம் பதினாயிரம் வருஷத்துக்கு மேற்பட்டது என்கிறார்கள். ஆரியர்கள் இந்தியாவுக்கு வந்தது 6000 வருஷத்துக்கு உட்பட்டது என்கிறார்கள். அதற்கு முன்பே தமிழர்கள் இந்தியா கண்டம் பூராவும் பரவி இருந்ததோடு தமிழர் ஆட்சியும் அங்கெல்லாம் பரவி இருந்தது என்றும் சொல்லி அஸ்ஸாம் கண்டுபிடிப்புகளையும், சிந்து கண்டுபிடிப்புகளையும் உதாரணம் காட்டுகிறார்கள்.

மீனக்கொடியோனாகிய தெற்கத்திய சம்பாரன் என்னும் 'அசுர' அரசனுடன் தசரதன் சண்டை போட்டதாகவும் வால்மீகி இராமாயணத்தில் இருக்கிறது. சம்பாரன் என்று ஒரு பாண்டிய மன்னன் இருந்ததாகவும் இலக்கியம் கூறுகிறது.

கதையை வளர்த்துவதற்காக இராமன் சீதையை அங்கு போய் தேடினான் என்று சொல்லப்பட்டிருக்கிறதே அல்லாமல் சீதை காணாமல் போன சிறிது காலத்துக்குள்ளாகவே இராவணன் தான் தூக்கிக்கொண்டு போனான் என்பதும், அவன் தெற்கே போனான் என்பதும் தெரிந்து போய் விட்டதாகக் காணப்படுகிறது.

அன்றியும் இராவணன் சீதையின் பக்கத்திலேயே இருந்து லக்ஷ்மணன் வெளியில் சென்றவுடன் தூக்கி வந்து இருக்கிறான். மாரீசன், தாடகையின் மகன் பக்கத்திலேயே வசித்திருக்கிறான். சூர்ப்பனகை தனது மூக்கறுபட்டவுடனே இராவணனிடம் சென்று இரத்த ஒழுக்கலோடு முறையிட்டிருக்கிறாள். இராவணன் உடனே மாரீசனோடு அதைப் பற்றிப் பேசுகிறான். விஸ்வாமித்திரன் யாகம் செய்ததும் தாடகை கெடுத்ததும் இந்தியாவின் இன்னும் வடக்கில் என்றாலும் சமீபமாகத்தான் காணப்படுகிறது. சுக்கிரீவன் அனுமார் முதலியவர்களையும் பர்ணசாலைக்கு சமீபத்திலேயே சந்திக்கிறான். ஜடாயு இரத்தம் காயாமல் உயிருக்குப் போராடிக்கொண்டிருக்கும் போதே இராமலக்ஷ்மணர்கள் காண்கிறார்கள். இராமன் "நான் புத்தியில்லாமல் இராக்ஷதர்களை விரோதித்துக்கொண்டேன்" என்று வருந்துகிறான்.

ஆகையால் வால்மீகி கதைப்படி இராக்ஷதர்கள் இராக்ஷத அரசர்கள் என்று சொல்லப்பட்டவர்கள் பெரும்பாலும் திராவிட நாட்டிற்குள் அல்லது நமக்கு சமீபத்திற்குள்தான் இருந்திருக்கவேண்டுமே ஒழிய அவர்கள் வெளி நாட்டார் என்றோ, வேறு இனத்தார் என்றோ சொல்லுவதற்குத்தக்க ஆதாரம் எதுவும் அதில் காணப்படவில்லை.

வால்மீகி இராமாயணத்தை வால்மீகி கதை மூலமாய் எழுதியதால் வர்ணனைக்கு ஆகவும் கவர்ச்சிக்கு ஆகவும் சில கற்பனைகள் சேர்க்கவேண்டியதாக ஆகி அவை ஒன்றுக்கொன்று முரண்படத்தக்கதாகவும் ஆகிவிட்டதால் பண்டிதர்கள் வக்கீல்களைப்போல் உண்மையைப்பற்றிய லக்ஷியமில்லாமல் தங்கள் வெற்றியையே குறி வைத்தும் சில அற்ப குறிப்புகளை எடுத்துக்கொண்டும் மனச்சாட்சிக்கு விரோதமாய் கூச்சல் போட்டு தேவ அசுரர்களை உறுதிப்படுத்துகிறார்கள் என்பதல்லாமல் வேறு உண்மை என்ன இருக்கிறது. புராணங்கள், இதிகாசங்கள் வேத சாஸ்திரங்கள் ஸ்மிருதிகள் என்பவைகளுள்பட ஆரியர்கள் தங்கள் உயர்வுக்கும் திராவிடர்களை இழிவுபடுத்தவும் செய்து கொண்டவைகளே தவிர வேறில்லை. அக்காலத்தமிழர்கள் ஒரு சமயம் பாமர மக்களாக இருந்திருக்கலாம். ஆதலால் சமய, சரித்திர ஆதாரங்களைக் கொண்டு நாம் நம்மைக் கவனிக்காமல் தற்கால அறிவைக் கொண்டு நிலைமையைக் கொண்டு பார்ப்பதுதான் பயன் தரக்கூடியதாகும்.

விளம்பர விகிதம்

கோர்ட்டு, முனிசிபாலிட்டி, ஜில்லா போர்டு முதலானவைகளுக்கு
அங்குலம் 1க்கு ரூ. 4-0-0
வியாபார விளம்பரத்துக்கு
அங்குலம் 1க்கு ரூ. 2-0-0
நீடித்த விளம்பரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

மானேஜர்,
"குடி அரசு" ஈரோடு.

திராவிடர்கள்

★

திராவிடர் கழகமானது இனத்தின் பேரால், பிறவியின் காரணமாய், நாட்டின் உரிமையின் காரணமாய், ஆரியர்களால் இழிவு செய்யப்பட்டு அடக்கி ஒடுக்கி தாழ்த்தி வைத்திருக்கும் மக்களின் விடுதலைக்கும் முன்னேற்றத்திற்கும் பாடுபடும் ஒரு அமைப்பு (ஸ்தாபனம்) ஆகும். விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால் இந்துமத (ஆரிய) தர்மப்படி 4-வது வர்ணஸ்தர்களாகவும் அல்லது 5-வது அவர்ணஸ்தர்களாகவும் ஆக்கப்பட்டிருக்கும் சூத்திரர்கள் எனப்படுபவர்கள் எல்லாருடையவும் விடுதலைக்கும் முன்னேற்றத்திற்கும் உழைக்கும் கழகமாகும்.

திராவிடர்களைத்தான் சூத்திரர்கள் என்பதாக இந்து மதத்தின் பேரால் ஆரியர்கள் அழைத்து வருகிறார்கள் என்பதற்கு பல ஆதாரங்கள் இருந்து வருகின்றன. உதாரணமாக மனுதர்ம சாஸ்திரத்தில் 10-வது அத்தியாயத்தில் சங்கர ஜாதி என்ற தலைப்பின் கீழ் ஜாதி தர்மத்தை அநுசரிக்காதவர்கள், அநுசரிக்காதவர்களுக்குப் பிறந்தவர்கள் திராவிடர் என்ற பெயர் கொண்டவர் என்றும், சூத்திரன் பிராமண ஸ்திரீயைப் புணர்ந்ததால் பெறப்படும் குழந்தைகள் பாக்கிய ஜாதியார் என்றும், அதாவது சமீபத்தில் வரக்கூடாத சண்டாள ஜாதி என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மற்றும் பிராமணர்களுக்கு சூத்திர ஸ்திரீகளிடத்தில் பிறந்த குழந்தைகள் ஆர்யா வர்த்த தேசத்தில் செம்படவன் என்று ஈனஜாதியாக சொல்லப்படுவார்கள் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மற்றும் ஜாதி தர்மம் தவறிய கலப்பினால் பிறப்பவர்களால் தான் தோல் வேலை செய்யும் (சக்கிலி) ஜாதியும் பிணத்தின் துணியைப் பிடித்துக் கொள்கிறவர்களும் எச்சில் சாப்பிடுபவர்களுமான (பறையர்) ஜாதியும் ஏற்படுகின்றன என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. "திராவிட தேசத்தை ஆண்டவர்கள் சூத்திரர்களாய் விட்டார்கள்" என்று தெளிவாகவே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது மனு 10வது அத்தியாயம் 44-வது ஸ்லோகம் ஆகும். மற்றும் "மிலேச்ச பாஷை பேசுகிறவர்கள் அனைவரும் தஸ்யுக்கள் என்று சொல்லப்படுவார்கள்" என்று தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது. இது 10-வது அத்தியாயம் 45-வது ஸ்லோகம். தஸ்யுக்கள் என்றால் திருடர்கள் என்ற கருத்தும் அதிலேயே கீழே காட்டப்பட்டிருக்கிறது.

இதில் மற்றொரு விசேஷம் என்னவென்றால் திராவிடன் என்கிற பெயரைப் போலவே ஆந்திரன் என்ற பெயரும் மனுதர்மத்தில் காணப்படுகின்றது. அதாவது காட்டிற்குச் சென்று மிருகங்களைக் கொன்று நாட்டில் கொண்டு வந்து விற்பவன் ஆந்திரன் என்று கூறப்பட்டிருக்கிறது. (அத்தியாயம் 10 ஸ்லோகம் 48) எனவே திராவிடர்கள், ஆந்திரர்கள் என்பது மாத்திரமல்லாமல் கீழான, இழிவான, தீண்டப்படாத, திருடர்களான ஜாதியார்கள் என்பதை மனுதர்ம சாஸ்திரம் நன்றாக வலியுறுத்துகிறது என்பது 10ம் அத்தியாயத்தில் சங்கர ஜாதி என்ற தலைப்பில் நன்றாக விளக்கப்பட்டிருக்கிறது.

மற்றும் "இவர்கள் அனைவரும் பட்டணத்துக்கும் ஊருக்கும் வெளியில் மரத்தடி, தோப்பு, மயானத்திற்குச் சமீபமான இடம் ஆகிய இடங்களில் இழிதொழிலைச் செய்யும் மக்கள் என்று யாவருக்கும் தெரியும்படியாக வாசம் செய்யவேண்டியது" என்று 50-வது ஸ்லோகத்தில் கூறப்படுகிறது. இப்படிப்பட்ட திராவிடர்களான மக்கள் "நாயும் கழுதைகளும்தான் வளர்க்க வேண்டியது 'மாடு முதலியவை வைத்துக்கொண்டு ஜீவிக்கக்கூடாது', என்று 51-வது ஸ்லோகம் கூறுகிறது.

52 முதல் 57-வது ஸ்லோகம் வரையில் என்ன கூறப்படுகிறது தெரியுமா?

திராவிடத் தோழர்களே! கவனியுங்கள். "இவர்கள் பிணத்தின் துணியையே உடுக்கவேண்டும். உடைந்த சட்டியில் அன்னம் புசிக்கவேண்டும். உலோக பாத்திரங்களை உபயோகிக்கக்கூடாது. இரும்பு பித்தளை ஆகியவைகளால் செய்யப்பட்ட நகைகளையே அணிய வேண்டும். இவர்கள் ஜீவனத்துக்காக எப்போதும் வேலை தேடிக்கொண்டே திரிய வேண்டும். நல்லகாரியம் நடக்கும்போது இவர்களைப் பார்க்கக் கூடாது. இவர்களோடு பேசக்கூடாது. இவர்களைத் தங்கள் ஜாதிக்குள்ளாகவே மணம் செய்து கொள்ளும்படி கட்டாயப்படுத்தவேண்டும். இவர்களுக்கே நேரே எதையும் கொடுக்கக்கூடாது. உடைந்த பாத்திரத்தில் அன்னம் போட்டு வைக்க வேண்டியது. ஊருக்குள் இரவில் சஞ்சரிக்க விடக்கூடாது' என்றும் இப்படிப்பட்ட ஈன ஜாதியார்கள் நல்ல வேடம் தரித்திருந்த போதிலும் அவர்களை ஈனர்கள் என்றே கருத வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஒரே ஒரு விமோசனம். அதென்ன தெரியுமா? அதுதான் ஏழெட்டு வருஷங்களுக்கு முன்பு காந்தியார் இங்கு வந்தபோது சொன்ன மார்க்கம். அதாவது ஒரு சூத்ர ஸ்திரீ வயிற்றில் பிராமணனுக்கு விவாக முறைப்படி பிறந்த பெண் மறுபடியும் பிராமணனையே மணந்ததின் மூலம் அவள் வயிற்றில் பிறந்து இப்படியாக 7 பிறவி பிறந்தால் 7வது தலைமுறையில் பிராமண ஜாதி ஆகலாம் என்பதுதான். இதுதான் காந்தியார் தமிழ் நாட்டிற்கு வந்தபோது திருப்பூரில் சொன்னது. மற்றும் கடைசியாக "சூத்திரன் பிராமணனுடைய தொழிலைச் செய்வதாலேயே பிராமணன் ஆகமாட்டான். எப்படி ஒரு பிராமணன் எந்தவிதமான இழிவான தொழிலைச் செய்தாலும் அவன் பிராமணனே ஒழிய சூத்திர ஜாதி ஆகமாட்டானோ அதுபோல ஒரு சூத்திரன் எவ்வளவு மேலான பிராமணன் தொழிலைச் செய்தாலும் பிராமணன் ஆகமாட்டான். இது பிரம்மாவினால் நிச்சயிக்கப்பட்ட உண்மையாகும், தத்துவமாகும்'. (அத்தியாயம் 10. ஸ்லோகம் 73.)

பிராமண தர்மம்

பிராமணன் கீழான தொழிலைச் செய்தபோதிலும் பயிரிடும் தொழிலை (உழுவதை) கண்டிப்பாய் செய்யக் கூடாது. அதைச் செய்யாவிட்டால் ஜீவனத்திற்கு மார்க்கமில்லை என்கின்ற காலத்தில் அந்நியனைக்கொண்டு செய்விக்கலாம். (அத்தியாயம் 10; ஸ்லோகம் 83)

[தொடர்ச்சி 8ம் பக்கம்]

ஏஜண்டுகள் தேவை.

நம் "குடி அரசு" பத்திரிகைக்குக் கீழ்க் கண்ட ஊர்களுக்கு டிபாசிட் கட்டக் கூடிய ஏஜண்டுகள் தேவை,

அரக்கோணம்
அம்பாசமுத்திரம்
பெங்களூர் சிட்டி
கடம்பூர்
காவேரிப்பாக்கம்
நாமக்கல்
பட்டுக்கோட்டை
பண்ருட்டி
சங்கரி துர்க்கம்
சீர்காழி
உடையார்பாளையம்
சிதம்பரம்
குத்தாலம்
ஆடுதுறை
நீடாமங்கலம்
அம்மாபேட்டை
நாகப்பட்டணம்

மானேஜர்,
"குடி அரசு" ஈரோடு.

குடிஅரசு

20-9-47 சனிக்கிழமை

கடலூர் மாநாடு

கடலூரில் சென்றவாரம் (14-9-47ல்) திராவிடநாடு பிரிவினை மாநாடு வெகு விமரிசையாய் நடந்தசேதியை திராவிட மக்கள் 'விடுதலை' முதலிய பத்திரிகைகளில் கண்டிருக்கலாம். இந்த மாநாடானது எந்த ஒரு கட்சியையோ ஸ்தாபனத்தையோ சேர்ந்ததாக இல்லாமல் திராவிடநாட்டுப் பிரிவினையை வேண்டும் எல்லா மக்களுக்கும் பொதுவான மாநாடாக நடத்தப்பட்டது. இதற்கு முன்னாள் அமைச்சர் மைலாப்பூர் பிரபல வழக்கறிஞர் தோழர் எஸ். முத்தய்யா முதலியார் அவர்கள் தலைவராகவும், சென்னை பாரிஸ்டர் டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் திறப்பாளராகவும், முன்னாள் சிறைச்சாலை நிர்வாக அதிகாரி தோழர் பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் வாழ்க்கைத் துணைவியார் தோழர் இந்திராணி பாலசுப்பிரமணிய அம்மையார் கொடி உயர்த்துபவர்களாகவும் அமைந்து சுமார் 20,000 மக்களுக்குமேல் ஆணும் பெண்ணும் இந்துக்கள், முஸ்லிம்கள், கிருஸ்தவர்கள், பகுத்தறிவாளர்கள், தமிழர்கள், தெலுங்கர்கள், கன்னடியர்கள், மலையாளிகள் என்கின்ற பிரிவார்களான திராவிடர்களாகவே பெரிதும் கூடி இருந்து மிக்க ஆடம்பரமாக, உற்சாகமாக மாநாடு நடந்தேறி இருக்கிறது. இக்கூட்டத்தில் பிரதிநிதிச் சீட்டுகள் மாத்திரம் 4000 பேர்கள் பெற்று பிரதிநிதிகளாக வந்து இருக்கிறார்கள். பல நாளாக, பல காரணங்களுக்கு ஆக விலகியிருக்கநேர்ந்த பல தோழர்கள் மாநாட்டில் வந்து கலந்துகொண்டது மாத்திரமல்லாமல் பங்கு கொண்டார்கள் என்றும் சொல்லலாம். குறிப்பாகத் தமிழ்ப் புலவர்பெருமான் திரு. வி. கல்யாணசுந்தரனார் அவர்களும் வந்து திராவிடநாட்டு லட்சியத்தை ஏற்று வலியுறுத்திச் சொற்பொழிவாற்றி அருளி இருக்கிறார் என்பது மிகுதியும் குறிப்பிடத்தக்கதாகும்.

திராவிடநாடுப் பிரிவினை என்பது இன்று திராவிடநாட்டில் உள்ள ஆரியரில் சிலர் உள்பட அநேகமாக எல்லா திராவிட மக்களாலும்வேண்டப்படும்காரியமாக ஏற்பட்டுவிட்டது. முயற்சி எடுத்துத் தனிப்பட்ட முறையில் குறிப்புத் தந்து திராவிடநாடு பிரிவினை மாநாட்டைக் கூட்டியவர்கள் அழைத்திருந்தால் பல ஆரியர்களும் "தேசியவாதிகளும் தேசபக்தர்களும்" கூட வந்திருப்பார்கள். இதை ஏன் சொல்லுகிறோமென்றால் அந்த பிரச்சினையானது இப்போது அவ்வளவு முக்கியத்துவமும் முதன்மைத்துவமும் அடைந்துவிட்டது. "திராவிடநாடு பிரிவினை என்பது புரியவில்லை" என்று கூறினவர்களும், "பரிகசிக்கத்தக்கது" என்று அலட்சியமாய் கிண்டல் செய்தவர்களும் அது "நினைப்பதற்குக்கூட மகாபாதகமானது" என்றவர்களும் இன்று அதைத்தவிர திராவிடர்கள் உய்வதற்கு வேறு வழி இல்லை என்று வெளிப்படையாய்ப் பேசி மற்றவர்களுக்கு புரியவைக்கும் பணியில் முனைந்திருக்கிறார்கள் என்பதைக்காட்டவே குறிப்பிடுகிறோம்.

திராவிடநாடு பிரிவினையை பெரியார்தான் முதல் முதலாக எடுத்துக்கூறினார். கூறினது மாத்திரமல்லாமல் இந்தப்படி நாடு பிரிந்து மேன்மையடைவது என்கின்ற தத்துவத்தை இந்தியாவிலேயே முதல் முதல் பெரியார்தான் எடுத்துச்சொன்னார். அதன்பிறகுதான் ஜின்னா சாயபு அவர்கள் கூறினார். அதன்பிறகே ஷெட்டியூல்ஸ்தான், சீக்கியஸ்தான், மாப்பிள்ளைஸ்தான், பிராமணஸ்தான், பஞ்சாப்ஸ்தான் முதலிய பல ஸ்தான்கள் பிரச்சினைகள் தோன்றின; பாகிஸ்தான் பிரச்சினை வெற்றியடைந்தும்விட்டது.

திராவிடநாடு பிரச்சினை இன்று இடங்கொண்டு ஒரு பலமான, செல்வாக்கான பிரச்சினையாக ஆகிவிட்டது. இதை ஒழிப்பதற்கு ஆகவே பலமான மத்திய அரசாங்கம் வேண்டும், சர்வ அதிகாரங்களும் மத்திய அரசாங்கத்தினிடம் இருக்கும்படியும், மாகாணங்கள் எல்லாம் மத்திய அரசாங்கத்திற்கு நிபந்தனையற்ற அடிமையாக இருக்கவேண்டும் என்கின்ற தன்மையிலும் சர்வாதிகார மத்திய ஆட்சி உருவாகிக் கொண்டு வருகிறது. அதற்கு ஏற்ற அடக்குமுறைகள் நீதி ஆகி வருகின்றன.

மாகாண சுதந்திரத்தோடு "எல்லா உரிமைகளையும் விட்டுக் கொடுத்துவிட்டு வெறுங் கையோடு இங்கிலாந்து செல்லுகிறேன் ஏற்றுக்கொள்ளுங்கள் உங்கள் நாட்டை" என்று கூறின வெள்ளையனை "ஐயோ நீ அதற்குள் போய்விடாதே" என்று இழுத்துப் போட்டு, "நீயே சொந்தக்காரனாக இரு. நாங்கள் அதிகாரக்காரர்களாக இருக்கிறோம், ஆபத்து வந்தால் காப்பதற்கு ஒரு பாந்தவன் வேண்டும்" என்கின்ற தன்மையில் குடியேற்ற நாட்டந்தஸ்து என்ற கவசத்தைப்பூண்டு கொண்டிருப்பதற்குக் காரணமும் திராவிடநாட்டுப் பிரச்சினையின் வலிமைதானே ஒழிய வேறு ஒன்றும் இல்லை. திராவிடநாடு பிரிய நேர்ந்து (நேர்ந்துவிடத்தான் போகிறது) விடுமேயானால் இந்துஸ்தான் என்ற பெயர் மறைந்து ஐரோப்பாவைப் போல் இந்தியா ஒரு கண்டமாகவும் பல, ஏன்? 20, 30 தனி சுதந்திரநாடுகளாகவும் தான் இருந்துவரவேண்டியதாகிவிடும் என்பதில் ஐயமில்லை. அந்தப்படி ஆகிவிட்டால் இந்திய யூதர்களாகிய மார்வாடி, குஜராத்தி, பிராமணக் கூட்டங்கள் நாடற்று, நகரமற்று, லம்பாடிகளாய்த் திரிய நேரிடுமே என்கின்ற கவலையாலேயே திராவிடநாடு பிரிவினையை சர்வ சக்தியோடு சர்வ சூழ்ச்சியோடு பலமான மத்திய அரசாங்கம் என்கின்ற சூழ்ச்சியால் எதிர்க்கிறார்கள்.

"என் உயிர்போனாலும் பாகிஸ்தானுக்குச் சம்மதிக்கமாட்டேன், பாகிஸ்தான் பிரிவினை என் பிணத்தின் மீதுதான் ஏற்படுத்த

முடியுமே ஒழிய என் ஜீவிய காலத்தில் ஏற்படுத்தமுடியாது" என்று கூறிய மகாத்மா (சாதாரண ஆத்மாக்களைவிட எத்தனையோ பங்கு பலம் பொருந்திய மகாத்மா) காந்தியவர்கள் தங்கத்தாம்பாளத்தில் பாகிஸ்தான் வைத்து ஜின்னா சாயபுக்குக் காணிக்கையாகக் கொடுத்து "ஓ பாகிஸ்தானே! நீ எவ்வளவு சீக்கிரம் இந்துஸ்தானை விட்டுத் தொலைகிறாயோ அவ்வளவுக்கு இந்துஸ்தானத்துக்கு உயிர்ப்பிச்சை" என்று ஆசீர்வதித்து விட்டார். ஏன் அப்படிச் செய்தார், மார்வாடி, குஜராத்தித் தலைவரான காந்தியார்? இதுதான் மிக இரகசியமான சங்கதி. திராவிடநாடு பிரச்சினையானது ஒரு மனிதனுக்கு பிளட் பாய்சன் (Blood Poison) விஷ ரத்தம் போல், சுரண்டலைத்தடுக்கும் விஷம் போல் இந்தியா என்னும் (மார்வாடி, குஜராத்தி பிராமண சமுதாய ஆதிக்கம் கொண்ட இந்தியா என்னும்) சரீரத்தில் சப்பரேட் பாய்சன் (Separate Poison) விடுபடு நஞ்சாக ஏற்பட்டு விட்டது. இந்த பாய்சன் (விஷத்தன்மை) பாகிஸ்தான் என்ற ஒரு அவையவத்தில் தான் சரியாக ஊறிப் புரை போய் விட்டது.

இனி அதைக் குணப்படுத்த முடியாது என்ற முடிவு கண்டு விட்டதால் உடனே அந்த அங்கத்தை—அவயவத்தை வெட்டி எறிந்து விட்டு மற்றதைக் காப்பாற்றுவோம் என்று அவசரமாக முடிவுக்கு வந்து வெட்டி விட்டார்கள். ஆனாலும் அந்தப் பிரிவினை நஞ்சு மற்றும் எத்தனையோ அவயவங்களில் புரை போய்க் கொண்டுதான் இருக்கிறது. அதில் முக்கியமான அவயவம் திராவிடநாடு பிரிவினை என்பது. இதற்கு அடக்குமுறைதான் சரியான சிகிச்சை என்று மார்வாடி, குஜராத்தி வைத்தியர்கள் கருதி அதிகக் காரமான மருந்தாக அதைப் பயன் படுத்துகிறார்கள். இப்போது பிரிவினை நஞ்சு இந்தியா சரீரமெங்கும் பரவி வருகிறது. திருவாங்கூர், மைசூர், காஷ்மீர் ஆகிய அவயவங்களில விஷம் மேலே செல்லுவது தடைப்படுத்தப்பட்டிருக்கின்றதே ஒழிய குணப்படுத்தப்பட்டு விடவில்லை. இதற்கும் எவ்வளவோ கசப்பும், காரமுமான மருந்துகள் சாப்பிடவேண்டி இருக்கின்றது.

ஐதராபாத் விஷம் பரவிக்கொண்டே இருக்கிறது. அழுகித் துண்டாகிக் கொண்டே வருகிறது. சுலபத்தில் பொருத்திவிட முடியாதபடி விஷம் ஏறிவிட்டது. திராவிட நாட்டுப் பிரிவினை என்னும் விஷம் இரத்தத்தைச் சீழ் ஆக்கிகொண்டு வருகிறது. இதை வெளிக்குக் காட்டாமல் மறைத்து வைத்துக் கொண்டு ஏதோ மருந்து போட்டுச் சௌக்கியப்படுத்திவிடலாம் என்று நினைக்கிறார்கள். வியாதியை மறைத்து விடுவதால் குணமாகி விடும் என்று நினைப்பவர்கள் தங்கள் சாவுக்கு அடிகோலுகிறார்கள் என்றுதான் கருதவே தவிர வியாதி குணப்பட்டுவிடாது.

உதாரணமாக கடலூரில் நடந்த மாநாட்டு நடவடிக்கைகளைப் பார்ப்பனப் பத்திரிகைளும் அவர்களது கொடுங்கோல் கட்டுப்பாட்டுக்கு அடிமையான மற்றப் பத்திரிகைகளும் எவ்வளவு மோசமான கீழ்த்தரப் புத்தியோடு அடக்கி, மறைத்து வருகிறார்கள் என்பதைப் பார்த்தால் இந்த இருட்டடிப்பு மருந்தால் இந்தப் பிரச்சினை மேலும் உரமாக தலை தூக்குமே ஒழிய மறைந்து விடுமா என்பதைத் திராவிட மக்கள் யோசிக்காமல் இருக்கமாட்டார்கள்.

திராவிடநாடு பிரியவேண்டும், பார்ப்பனர்களின் வடநாட்டாரின் இரத்தக் கொடுங்கோன்மை ஆதிக்கம் ஒழியவேண்டும் என்பதற்கு இந்த மாதிரியான இருட்டடிப்பு அதாவது விஷயங்களை அடியோடு மறைத்து விடுதல் சேதி முதலிய இலாகா முழுவதும் இப்படி திராவிட சமுதாயத்துக்குக் கேடான ஒரு கூட்டத்தினிடம் இருந்து கொண்டு மக்களை வஞ்சித்துத் தவறான கருத்தில் ஆழ்த்திக் கீழ்மைப்படுத்துதல் என்கின்ற ஒரு காரியமே சரியான சான்று ஆகாதா? எது எப்படியிருந்தாலும் பிரச்சினை முற்றி இருக்கிறது, பலம் பெற்று இருக்கிறது, மக்கள் ஆதரவு பெற்று இருக்கிறது என்பதில் இனி திராவிட மக்களுக்கு ஐயம் வேண்டியதில்லை.

மாநாட்டில் முஸ்லிம் தோழர்கள் ஏராளமான பேர்கள் சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்டு இரண்டாயிரம் பேர்கள் வரை வந்திருந்தது மாத்திரமல்லாமல் சரி பகுதி பேர்கள் கருப்புச்சட்டையுடன் காட்சி அளித்தது மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.

மாநாட்டில் பேசிய முஸ்லிம் தோழர்கள் இந்து திராவிடர்களுக்கு திராவிடநாடுபிரிவினை வேண்டியதைவிட இஸ்லாமிய திராவிடர்களுக்கு மிக மிக அவசரமாகவும் அவசியமாகவும் வேண்டியிருக்கிறது என்பதைக் குறிப்பிட்டபோது அங்குள்ள இஸ்லாமியத் தோழர்களுடைய ஆரவாரம் முகிலை முட்டியது. இஸ்லாமியர்களினும் சில படித்த மக்களைப் பட்டேல் பாசிச ஆட்சி மிரட்டுகிறது. எப்படி மிரட்டுகிறது என்றால் 'உங்களுக்கு உத்தியோகம் பதவி விகிதம் வேண்டுமானால் போங்கள் பாகிஸ்தானுக்கு! இங்கு ஒன்றும் கவனிக்க முடியாது" என்று. இந்த மிரட்டலைக் கண்ட இஸ்லாம் படித்தவர்களும், செல்வர்களும் ஆனவர்களில் சிலர் துப்பாக்கியைக் கீழே போட்டு நாக்கேன் இந்தத் தொல்லை எப்படியும் திராவிடநாடு பிரிந்துதான் தீரும் என்று அரைக்கருணையோடு அலட்சியமாய் இருக்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்டித் தாங்கள் எந்தவித நிபந்தனையுமற்று மனமொழிமெய்களால் எவ்விதக் கஷ்டத்திற்கும் அஞ்சாமல் தொண்டாற்றுவோம் என்று கூறி உற்சாகப்படுத்தியது போற்றற்குரியதாகும். எந்தக் காரணத்தாலானாலும் சரி தனித்து இருக்கும் தோழர்கள், ஒதுங்கி இருக்கும் தோழர்கள் இன்றைய நிலையைப் பார்த்துத் திராவிட சமுதாயத்தின் கட்டுப்பாட்டையும் ஒற்றுமையையும் ஒழுங்குமுறையையும் எதிரிகளுக்கு உணர்த்தி வெற்றிக்கு வழி தேடவேண்டியது திராவிடப் பண்பு என்று எடுத்துக்கூறுவோம். பாக்கிஸ்தானத்துக்குக் காரணம் இஸ்லாமியர்களுடைய

'வர்ண'மும்-காந்தியாரும்

★

[இம்மாதம் 10ந் தேதி ஈரோட்டில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் பெரியாரவர்கள் பேசும்போது "வர்ணாஸ்ரம தர்மத்திற்காக உயிர்வாழும் காந்தியாரை நான் எப்படி நம்பமுடியும்? நான் எப்படி பின்பற்றமுடியும்?" என உருக்கமாகக் கேட்டபோது, ஒரு தேசியத் தோழர், "காந்தியார் எப்போது வர்ணாஸ்ரமத்தை ஆதரித்துள்ளார்" எனக் கேட்டார். அப்போதே பெரியார் பல ஆதாரங்களை எடுத்துக்காட்டினார். இதே மாதிரியான சந்தேகம் பலர் மனதில் இருக்கலாம். அவர்கள் பார்வைக்காகவேதான், காந்தியார் 'எங் இந்தியா'வில் எழுதியதை கீழே குறித்துள்ளோம். —ஆசிரியர்.]

"உலகத்தில் தற்போது நிலவும் பொருளாதாரச் சீர்குலைவுக்கும், ஆத்மார்த்தத்தை (Spiritualism) மறந்து மக்கள் பொருளாசை கொண்டு பல தீய காரியங்களில் ஈடுபடவேண்டிய நிலைமைக்கும் காரணம் வர்ணாஸ்ரம தர்மத்தை மக்கள் கடைப்பிடிக்காதது தான்"..............

"வர்ணங்கள் நான்கு பிரிவுகள் ஆகும். இப்பிரிவுகள் மிகவும் புத்திசாலித்தனமான பிரிவுகளாகும்"

"தீண்டாதவர்கள் என்பதாக ஒரு வர்ணம் கிடையாது. அவர்கள் சூத்திரர்கள் என்ற பிரிவில் சேர்க்கப்படவேண்டியவர்கள்." 'எங் இந்தியா' 17-11-1927

கேள்வி:- தாங்கள் வர்ணதர்மத்தை வற்புறுத்துவது எங்களுக்குப் புரியவில்லை. 'வர்ணம்' என்பதற்கு விளக்கம் தாருங்கள்.

காந்தியாரின் பதில்:- ஒரு மனிதனின் தொழில்பற்றி பிறவியின்போதே நிர்ணயிப்பதற்கான சட்டமுறைதான் 'வர்ணம்' எனச்சொல்லப்படுவது: 'வர்ண'த்தின் சட்டம் என்னவென்றால் ஒவ்வொரு மனிதனும் அவன் முன்னோர்கள் செய்துவந்த தொழிலையே மேற்கொள்ளவேண்டுமென்பதுதான். 'வர்ண' முறை இந்துக்கள்மீது திணிக்கப்பட்ட ஒன்றல்ல. இந்துக்களின் நல்வாழ்க்கைக்குக் கர்த்தாக்களாக இருந்த பெரியோர்கள் கண்டுபிடித்த ஓர் உன்னத முறையாகும்............

மேற்கில் ஐரோப்பியர்கள் பல விஞ்ஞான அதிசயங்களைக் கண்டுபிடித்துள்ளார்கள். ஆத்மார்த்தத்துறையில் மற்றெந்த தேசத்தாரையும்விட பலமடங்கு முன்னேறியவர்கள் இந்துக்கள் என்பதை 'வர்ணமுறையைக் கண்டுபிடித்ததின் மூலம் நாம் நிரூபித்துவிட்டோம்...............நான்கு வர்ணத்தாருக்கும் (பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்ர) முறையே கற்பித்தல், காப்பாற்றுதல், பொருளீட்டல், உடலுழைப்பு (manual service) ஆகியவையாகும்.

கேள்வி:— ....ஒரு சூத்திரனுக்கு, ஒரு பிராமணனுக்கமைந்திருக்க வேண்டிய பண்புகள் யாவும் அமைந்திருப்பின் அவனை பிராமணன் என்று அழைக்கலாமா?

காந்தியாரின் பதில்:— இந்தப் பிறவியில் கூடாது. தான் பிறக்காத ஒரு வர்ண பாத்யதையைக் கொண்டாடாமல் இருப்பதுதான் நல்லது.

"எங் இந்தியா"
24-9-27.

ஒற்றுமை, கட்டுப்பாடு, கண்மூடிப் பின்பற்றுதல்தான். பாக்கி இந்தியா (இந்துஸ்தான்) இன்று பார்ப்பன ஸ்தானாக இருப்பதற்குக் காரணம் பார்ப்பனர், மார்வாடி குஜராத்திகள் ஆகியவர்களின் ஒற்றுமைக் கட்டுப்பாடு கண்மூடிப் பின்பற்றுதல் ஒரே குரலாக வடநாட்டானுக்குக் காட்டிக்கொடுத்து அவனுடைய சர்வாதிகாரத்துக்கு கட்டுப்பட வசப்படுத்தி அபிப்பிராயபேதமில்லாமல் தொண்டாற்றி இருட்டடிப்பதுதான். இத்தப்படிப்பினை திராவிடர்களுக்கு ஏற்படவேண்டும். ஏற்படாது என்று வடநாட்டானும் பார்ப்பனர்களும் நினைத்துக்கொண்டு, முடிவுகட்டிக்கொண்டு இருக்கிறார்கள். தங்களுக்குள் ஒற்றுமை கட்டுப்பாடு, பின்பற்றுதல் ஏற்படாது என்று கருதியே பல திராவிட மக்கள் தங்கள் தங்கள் காரியத்தையாவது சாதித்துக் கொள்ளலாம் என்று கருதி ஆரியருக்கு அடிமையாகி வாழ நாள் கடத்துகிறார்கள். அடிமையாக மேலும் சிலர் துடிக்கிறார்கள்.

இந்தத் தன்மையை கடலூர் மாநாடு மாற்றும் என்றும், மற்ற மக்களும் வந்து சேரும்படி இப்படிப்பட்ட மாநாடுகள் இனியும் நடக்கும் என்றும் கருதுகிறோம்.

திராவிடநாடு திராவிடருக்கே!

ஈரோடு முனிசிபல் தேர்தல்

24 ஸ்தானங்களில் 4 ஸ்தானங்களுக்கு மட்டும் தான் போட்டியில்லை

ஈரோடு முனிசிபல் தேர்தலில் இதுவரை காங்கரசுக்கு 2 ஸ்தானங்களும், காங்கரசல்லாதாருக்கு 2 ஸ்தானங்களும் போட்டியில்லாமல் கிடைத்திருக்கிறது. பாக்கி 20 ஸ்தானங்களுக்கும் போட்டி பலமாக இருந்து வருகிறது. 1, 2, 3 நெ. வார்டுகளாகிய கருங்கல்பாளையத்தில் எப்போதுமே எவ்வளவு அபிப்பிராய பேதமிருந்த போதிலும் கடைசி நேரத்தில் ஏதாவது ஒரு வகையில் ராஜி ஏற்பட்டு 3 ஸ்தானங்களிலும் போட்டியில்லாமல் செய்து கொள்வது வழக்கம் என்பதோடு கருங்கல்பாளையம் என்றால் காங்கரஸ் கோட்டை என்றும், அங்கு வேறு எந்தக்கட்சிக் கொடியும் கூட பறக்கக்கூடாது என்றும் ஜம்பம் அடித்துக்கொண்டிருப்பது காங்கரசாரின் வழக்கமாயிருந்து வந்தது. ஆனால் உண்மையில் இந்தத் தேர்தலில் மற்ற எல்லா வார்டுகளையும்விட கருங்கல்பாளையத்திலுள்ள 3 வார்டுகளிலும்தான் போட்டி மிக மிகப் பலமாக இருந்து வருகிறது.

4-வது வார்டில் தன்னைத்தான் காங்கரஸ் அட்ஹாக் கமிட்டியார் தேர்ந்தெடுப்பார்கள் என்று மனக்கோட்டை கட்டிக்கொண்டிருந்தவர்கள் பெயரெல்லாம் காங்கரஸ் லிஸ்டில் வராமல் போகவே அவர்களெல்லாம் தான் முக்கியமாக அந்த வார்டில் நிற்கும் காங்கரஸ் அபேட்சகருக்கு விரோதமாக வேலை செய்து வருகிறார்கள். அத்துடன் 4, 6, 10, 11, 12, 14, 19 நெ. வார்டுகளில் காங்கரஸ் கட்சி சார்பில் நிறுத்தப்பட்டிருக்கும் அபேட்சகர்களுக்குப் போட்டியாக காங்கரஸ்காரர்களே நிற்பதோடு மட்டுமல்லாமல் அடிக்கடி பொதுக்கூட்டம் போட்டு காங்கரஸ் கட்சியின் பேரால் நிற்பவர்களின் யோக்கியதைகளைப்பற்றியும், அவர்களை நிறுத்திய அட்ஹாக் கமிட்டியார் யோக்கியதைகளைப்பற்றியும் மிக விளக்கமாக எடுத்துக்கூறி வருவதன் மூலம் வெள்ளைக்காரன் கப்பலேறுவதற்கு முன்னாடியே காங்கரசின் மானம் கப்பலேறி வருகிறது. முனிசிபல் எலெக்ஷனில் அரசியல்கட்சிக்கு என்ன வேலை? என்று பொதுமக்கள் சர்வ சாதாரணமாகப் பேசிக்கொள்ளுகிற நிலைமைக்கு காங்கரசின் சாயம் வெளுத்துவருகிறது.

நம் தோழர்கள் S. R. கண்ணம்மாள்,

E. V. K. சம்பத் இருவர்களும் முறையே 8வது வார்டு பெண்கள் தொகுதிக்கும், பொதுத்தொகுதிக்கும் அபேட்சகராக நிற்கிறார்கள். போட்டியில்லாமல் விடக்கூடாது என்ற மனப்பான்மை கொண்டு பெண்கள் தொகுதிக்கு ஒருவரை காங்கரசார் கடைசிநேரத்தில் நிறுத்தியிருக்கிறார்கள். ஆகஸ்டில் "தியாகம்" செய்த வீரர் ஒருவர் தனக்கு இந்த எலெக்ஷனில் நிற்க இடம் கேட்டதற்கு உண்மையிலேயே அந்தத்தோழர் மீது நல்லெண்ணம் காங்கரசாருக்கு இருந்திருந்தால் நிச்சயம் வெற்றிபெறக் கூடிய வார்டில் நிறுத்தியிருப்பார்கள். ஆனால் பாவம்! அவரை இந்த எலெக்ஷனில் தோழர் சம்பத்துடன் போட்டியிட்டுத் தோற்று "செப்டம்பர் தியாகி" யமாகும்படி செய்துவிட்டார்கள் காங்கரஸ் அட்ஹாக்கமிட்டியார்.

9-வது வார்டில் நம் தோழர் S. R. சந்தானம் அவர்களுக்குப் போட்டியாக காங்காஸ்கட்சி சார்பில் நிறுத்தப்பட்டிருக்கும் அபேட்சகர் "யுத்தகாலத்தில்" சம்பாதித்த பணம் பூராவையும் செலவழித்தாவது எப்படியும் சேர்மனாக வர வேண்டும் என்று எண்ணியிருக்கிறதாகத் தெரிகிறது. ஆனால் 9-வது வார்டு மக்கள் கவுன்சிலராகத் தேர்ந்தெடுத்தால் தானே அந்தப் பிரச்சினை?

12-வது ரயில்வே ஸ்டேஷன் வார்டில் நம் தோழர் R. லூர்துசாமி கிறிஸ்துவத் தொகுதிக்கு நிற்கிறார். அந்த வார்டில் ரயில்வே தொழிலாளிகள்தான் பெரும்பாலான வாக்காளர்கள். அவர்களுக்குக் "கருங்காலி"யாக வேலை செய்த காங்கரசுக்கு ஒரு நாளும் "வோட்" செய்யப்போவதில்லை என்பதை இந்தத் தேர்தலில் நிரூபிப்பார்கள் என நம்புகிறோம்.

மற்றும் 4, 6, 10, 11, 13, 17, 19 நெ. வார்டுகளிலும் நம் இயக்க அபிமானிகளே பெரும்பாலும் வெற்றி பெறக்கூடும் என்று தெரிகிறது. எப்படிக் கணக்குப் போட்டுப் பார்த்தாலும் காங்கரஸ் கட்சி சார்பில் நிறுத்தப்பட்ட அபேட்சகர்கள் மெஜாரிட்டியாக வர முடியாது! முடியாது!! முடியாது!!! என்று மூக்காலும் உறுதியாகக் கூறலாம்.

எந்தப் பார்ப்பனராவது வேஷம் போட்டு ஆடுவதோ, செடில் குத்திக் கொள்ளுவதோ, அலகு குத்திக்கொள்ளுவதோ, கன்னத்திலோ, நாக்கிலோ கம்பியைக் குத்திக்கொள்வதோ ஆகிய காரியங்களைச் செய்கிறார்களா? கோயில் கட்டுகின்றார்களா?

ஈ. வெ. ரா.

சொல்லுமையா, கேட்போம்!

(எஸ். கருணானந்தம்)

★

சொல்லுமையா தேசியப், பொதுவு டைமைத்
தோழர்காள்! வைதிகரே! குருக்கள் மாரே!
நல்லசுய மரியாதை இயக்கந் தன்னை
நாத்திகம் என்றுபல நவில்வ தேனோ?
செல்லுகிற நெறிமுறையில் தீதோ, அன்றிச்
சீர்திருத்த நோக்கத்தில் குறைதான் உண்டோ?
சொல்லிவரும் கொள்கையிலே தவறோ, இன்றேல்
சுதந்திரத்திற் கெதிர்ப்படையாய் ஏதும் உண்டோ?

மக்களிலே மேல்கீழாம் மாறு பாடும்,
மடமையுடன் அடிமைநிலை மடிய வேண்டும்.
துக்கமுறும் விதவையர்க்கும் கன்னி கட்கும்
சுயமாகக் கல்யாண உரிமை வேண்டும்;
தக்கசம நிலையடையச் சமுதாயத்தில்
தடையாகுங் கொடுமையெலாம் தகர வேண்டும்;
மிக்கவொரு முன்னேற்றம் வேண்டும் என்போம்—
விளம்பிடுவீர், இவைகளிலே எதுதான் வேண்டாம்?

கடவுளென இதுவரையிற் கண்டோரில்லை,
கண்டாலும் ஒன்றைத்தான் காணக் கூடும்.
திடமுடனே பற்பலபேர் செப்பி, என்றும்
தெய்வத்தை நாமெதற்கோ வளர்க்க வேண்டும்?
இடமுடைய கோயிலுமேன், சிலைகள் ஏனோ?
எண்ணற்ற பொருட்குவியல், இளம்பெண் ஏனோ?
உடலொடியக் கட்டியவர் ஒதுங்கி நிற்க,
ஒன்றுமிலாப் பார்ப்பனர்க்கு உயர்வேன், சொல்லும்!

ஆதிமுதல் வளர்ந்துவரும் அடிமை—ஆண்டான்,
அதிகாரி—பணியாளன், மேலோன்—கீழோன்,
சாதி,மத பேதங்கள் தகர வேண்டில்
சகமெல்லாந் தன்மதிப்புப் பரவ வேண்டும்,
நீதிமுறை, நேர்மைநிலை நிலவ வேண்டும்;
நித்தியமும் இன்பமுற வேண்டும் என்போம்.
வேதியரே, வீண்கூச்சல் வேண்டாம், எம்மை
வெறுப்பதற்குக் காரணங்கள் விளம்பும், கேட்போம்!

(3ம் பக்கத்தொடர்ச்சி)

ஏனெனில் அந்தப் பிழைப்பு இரும்பு கலப்பையையும் மண்வெட்டியையும் கொண்டு பூமியை வெட்ட வேண்டியதாகும். ஆகையால் பிராமணர் உழுது பயிரிடுதல் கூடாது என்பதாகும். (அத். 10. சு. 84).

தாழ்ந்த ஜாதியான் மேலான ஜாதியானின் தொழிலைச் செய்தால் அவனுடைய பொருள் முழுமையும் பிடுங்கிக் கொண்டு அவனையும் நாட்டைவிட்டு அரசன் உடனே விரட்டிவிட வேண்டும். (அத். 10. சு. 96.)

சூத்திரனுக்கு சம்ஸ்காரங்கள், ஓமம் வளர்த்தல் முதலியவைகளுக்கு உரிமை கிடையாது. (அத். 10. சு 126)

சூத்திரன் எவ்வளவு தகுதியுடையவனாயினும் தன் ஜீவியத்துக்கு அதிகமாக பொருள் சம்பாதிக்கக்கூடாது. அப்படிச் சம்பாதித்தால் அது பிராமணனுக்கு இம்சையாக நேரும்.

(அத் 10 சு. 129)

சூத்திரனுக்கு யாகாதி கர்மங்கள் சம்பந்தமில்லை' ஆதலால் அவன் வீட்டிலுள்ள செல்வத்தை பிராமணன் தாராளமாக வலிவினாலும் கொள்ளலாம்.

(அத். 11. சு. 13)

அசுரர்கள் என்பது சூத்திரர்களைத்தான் என்பதற்கு ஆதாரம் மனுதர்ம சாஸ்திரத்தில் 11வது அத்தியாயம் 20வது சுலோகத்தில் காணப்படுகிறது. அதாவது யாகம் செய்யாதவர்கள் அசுரர்கள்—அவர்கள் பொருளைக்கவருவது தர்மமாகும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

திராவிடர்கள் சூத்திரர்கள். சூத்திரர்களுக்கு யாகாதி காரியங்களுக்கு உரிமையில்லை. யாகம் செய்யாதவர்கள் அசுரர்கள். இந்த மாதிரி குறிப்புகள் மனுதர்ம சாஸ்திரத்தில் இருக்குமானால் மனுதர்ம சாஸ்திரமே ஹிந்து மதத்திற்கேற்பட்ட தர்மமானால் திராவிடர்கள் ஹிந்துக்களானால் திராவிடர்களின் நிலை என்ன என்பதைப் பொது மக்கள் உணர்ந்து பார்க்க வேண்டுமாய் விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட இழிவுகளேற்பட்ட தன்மை திராவிட சமுதாயத்திற்கே இருக்கக்கூடாதென்றும், அவை எப்படியாவது ஒழிக்கப்பட்டே ஆகவேண்டுமென்றும் அதற்கு முக்கிய எல்லையான திராவிட நாட்டை (சென்னை மாகாணத்தை) பரப்பாக வைத்து அதிலுள்ளவர்களை திராவிடர்களாகக் கருதி நடத்தப்படும் திராவிடர் கழக திராவிட நாடு எழுச்சிக்கு தமிழ்நாடு, ஆந்திரநாடு, கேரளநாடு, கர்னாடகநாடு என்பதான கிளர்ச்சிகளை இந்த முக்கிய குறிப்பில்லாமல் குறுக்கேபோட்டு மொழியைப் பிரதானமாக வைத்துக்கொண்டு போராடுவதென்றால் மனுதர்ம சாஸ்திரத்தை மெய்ப்படுத்துகிறோம் என்பதல்லாமல் அதில் வேறு தன்மை என்ன இருக்கிறதாகக் காணமுடியும்.

சிந்தனைத் திரட்டு

[பெரியார் அவர்கள் பற்பல சந்தர்ப்பங்களில் ஆற்றிய சொற்பொழிவுகளிலிருந்து திரட்டிய அரிய சில கருத்துக்களின் தொகுப்பைக் கீழே வெளியிடுகிறோம்-ஆசிரியர்]

மதக்குறி என்பது மாட்டு மார்க்காரன் தனது மாடுகளுக்குப் போடும் அடையாளம் போலவே, மதத்தலைவன் தனது மதத்தைப் பின்பற்றுகின்றவர்கள் என்பதைக்காட்ட ஏற்படுத்திக் கொண்ட குறியேயாகும்.

o o

இந்துமதத்தின் கல்வித் தெய்வமும் செல்வ தெய்வமும், பெண் தெய்வங்களாயிருந்தும் இந்துமதக் கொள்கையின்படி பெண்களுக்கு கல்வியும் சொத்துக்களும் இருக்க இடமில்லை.

o o

இந்தியாவில் காகிதம், புஸ்தகம், எழுத்து, எழுது கருவி எல்லாம் சரஸ்வதியாகப் பாவிக்கப்பட்டு வணங்கி வந்தும் 100க்கு 10 பேர்களேபடித்திருக்கின்றார்கள்.

o o

இந்தியாவிலுள்ள தொழிலாளிகள் தங்கள் ஆயுதங்களையெல்லாம் சரஸ்வதியாகக் கருதி பூஜைசெய்தும், இந்தியர்கள் தொழிலில்லாமல் கப்பலேறி வேறு நாட்டிற்குக் கும்பல் கும்பலாய்ப்போய் மடிகிறார்கள்.

o o

சுதந்திரமான காதலுக்கு இடமிருந்தால்தான் ஒரு நாடோ ஒரு சமூகமோ அறிவு அன்பு நாகரீகம், தாட்சண்யம் முதலியவைகளில் பெருக்கமடையும். நிர்ப்பந்தக் காதல் இருக்குமிடத்தில் மிருகத் தன்மையும் அடிமைத் தன்மையும் அடிமைத்தன்மையும்தான் பெருகும்.

o o

பெண்களுக்கு மாத்திரம் கற்பு நிர்ப்பந்தமாய் வைத்ததாலேயே ஆண்கள் விபசாரகர்களாக வேண்டியதாய் விட்டது.

o o

விதவைத் தன்மை இல்லாமலிருந்தால் அரைபாகம் விபசாரத்தன்மை குறைந்திருக்கும்.

o o

இவர்கள் என்ன சொல்லுவார்கள், அவர்கள் என்ன நினைப்பார்கள் என்று நினைக்கிற தன்மை ஒருவித அடிமைத் தன்மையேயாகும்.

o o

பிரதிநிதித்துவத்தாலும் ஓட்டுகளாலும் எல்லா சீர்திருத்தமும் செய்துவிடலாம் என்று நினைப்பது முடியாத காரியமாகும். சில சீர்திருத்தங்கள் எதேச்சாதிகாரத்தாலேயே செய்தாக வேண்டும்.

o o

உண்மையான யோக்கியன் சர்க்காருக்கோ அல்லது பொதுஜனங்களுக்கோ நல்லவனாக இருக்கமுடியாது.

o o

மனிதன் பெண்களை தன்னுடைய ஒரு சொத்தாக மதிக்கிறானேயொழிய தன்னைப்போன்ற உணர்ச்சிக்கு அருகதையுள்ள ஜீவன் என்று மதிப்பதில்லை.

o o

வேண்டுதலை வேண்டுதலை வேண்டுதலை என்று பார்ப்பனரல்லாதார் ஆண்களும் பெண்களும் தலை மொட்டை அடித்துக்கொள்வதுபோல பார்ப்பனர்களில் யாராவது மொட்டை அடித்துக் கொள்கிறார்களா?

o o

எந்தப் பார்ப்பனராவது சத்திரம் கட்டி எல்லா மக்களுக்கும் சாப்பாடு போடுகிறார்களா? எங்காவது தமிழ்ப் பள்ளிக்கூடம்கட்டி இருக்கின்றார்களா?

o o

சடங்கு, பண்டிகை, உற்சவம், இம்மூன்றும் மக்களைப் பொருளாதாரத்துறையில் அடிமையாக்கி வைப்பதற்காகவே இருந்து வருகின்றன.

o o

மேலுலகம், மோட்சம், நரகம், இம்மூன்றும் மனிதனை மூடனாகவும் பயங்காளியாகவும், அடிமையாகவுமே ஏற்படுத்தப்பட்டவை.

o o

என்ன கஷ்டப்பட்டாவது மறுஉலகத்தை தயவுசெய்து மறந்துவிட்டு இந்த உலக நடவடிக்கைகளுக்கு உங்களுடைய வாழ்க்கையை பொருத்துங்கள்.

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42, Cutchery street, ERODE.